TNTAM / 2013 / 53818

# மகளிர் உரிமை

நம் குரல் நம் பலம்

## MAGALIR URIMAI

மலர் : 11 இதழ் : 8 விலை : 10/- ஆகஸ்ட் : 2024
Vol. : 11 Issue : 8 Price : 10/- August : 2024



விழுப்புரத்தில் புதிய ஆரம்பம்...

# SONA
## Women's Hostel
*Stay Like Your Home*



மாத வாடகை ரூ.
**4500** மட்டுமே!

**பெண்களுக்கு 100%**
**பாதுகாப்பான ஹாஸ்டல்...**

36, விராட்டிக்குப்பம் பாதை, (சென்னை மேம்பாலம் அருகில்) விழுப்புரம்.

தொடர்புக்கு: **91500 46001**

# mahila™
MAKE UP STUDIO & BEAUTY LOUNGE

De-Tan
Facial
Pedicure

Rs.**999** only

Haircut + Hairspa Rs.1499
Get complimentary Thredning

**For Appointments**

**044-2650 0008 | Cell : 93828 22822**

No.2, Floor No.2, 1st Street, Redhills, Road, Near Villivakkam Subway,
Netaji Nagar, Villivakkam, Chennai, Tamil Nadu 600049

TNTAM / 2013 / 53818

# மகளிர் உரிமை
MAGALIR URIMAI

மலர் : 11 | இதழ் : 8 | விலை : 10/- | ஆகஸ்ட் : 2024
Vol. : 11 | Issue : 8 | Price : 10/- | August : 2024

வெளியீட்டாளர்கள் :
**T.K.அசோக்குமார்**
**Dr.B.மோகனப்பிரியா பிரகாஷ்குமார்**
Email ID : magalirurimai@gmail.com

இணை ஆசிரியர் :
திருமதி. **பிரேமாவதி அசோக்குமார்**

ஆலோசகர்கள் :
**K.அம்சவேணி குப்புசாமி**
**ஈகை.க.கருணாகரன்**
ரெயின்போ. **Ln.S.கோவிந்தராஜ்** M.A.,

துணை ஆசிரியர் :
**D.கிறிஸ்துராஜன், ஜீவமாணிக்கம்**
**N.சிவக்குமார், M.A.விஜய்**

தலைமை பொருப்பாளர் : **ஞானசேகர் R.S.**
தலைமை ஆசிரியர் : **S.J.ஆசைராஜ்**

சட்ட ஆலோசகர்கள் :
**G.தியாகராஜன்** B.A., LLB.,
**G.ஜெயந்தி** B.A., LLB.,
**U.K.கலையரசி** B.A., B.L.,

மக்கள் தொடர்பு
**A.ஜெப அருள் ராஜ் - A.ஜான் கார்னல் சிங்**
ஒருங்கிணைப்பு :- **செந்தில்குமார் மாணிக்கம்**

மாவட்ட வாரியான நிருபர்கள்
B.சௌகத்அலி பாபு, A.பாலசுப்பிரமணியன், J.பொன்னுராஜம், S.வின்சென்ட் விஜயகுமார், R.ஆதிமூலம், J.ஜானகிராமன், C.கணபதி, D.பிரசன்னாV.மனோஜ்குமார், மீனா சித்ரா, C.சித்திரவேலு, R.சரவணன், A.பாலாஜி, D.பிரகாஷ், புகழேந்தி கணேசன், மதியழகன், செல்வகுமார், முருகபாண்டி, சுப்பையகுமார், டாக்டர்.கதிர்வேல் ரவிசந்திரன், கந்தன், ராதா, சரவணன், ஆனந்த்பாபு, ராஜேஷ், சங்கர், ராதாகிருஷ்ணன், தினேஷ்குமார், சிவக்குமார், வின்சென்ட், பிரகாஷ்குமார், விஷ்ணுகுமார், அப்துல் ரஹீம், ஜான்சிராணி, அருணாச்சலம், காதர் பாஷா

இதழ் வடிவமைப்பு : **சந்துரு. எம்**

## தலையங்கம்

அன்புடையீர்,
வணக்கம்.
நம் குரல்/நம் பலம்
தலை நிமிர்ந்து நில்லுங்கள் !
இது நம் காலம், நம் உரிமை
நம் உள்ளத்தில் கனழில் தெறிக்கட்டும்
நம் கைகளில் அதிகாரம்
கொப்பளிக்கட்டும்
இனி நாம்தான் "மகளிர் உரிமை"
இதழின் தலையங்கம்
நம் குரலே நம் வழிகாட்டி
நம் வலிமையே நம் உத்வேகம்
இணைவோம்
உரிமைக்காக
போராடுவோம்
உலகை வெல்வோம்!

---

நாடாளுமன்ற பட்ஜெட் 2024 தாக்கல் செய்த மாண்புமிகு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களே நிதி ஒதுக்கீடு அனைத்து துறைக்கும் சரிசமமாக செய்வார் என எதிர்பார்த்த பெண்கள் கூட்டம், மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தமிழ்நாட்டிற்கான நிதியில்லையே என பெண்கள் ஆதங்க குரல்.

---

பொதுமக்கள் & வாசகர்கள் கவனத்திற்கு :
பெண் உரிமை சம்பந்தப்பட்ட பிரச்சனைகள்,
சிவில், கிரிமினல் வழக்குகள்,
குடும்ப நல நீதிமன்ற வழக்குகள்
மற்றும் இலவச ஆலோசனை தொடர்புக்கு :

**T.Kஅசோக்குமார்** B.A., B.L.,
196, LAW CHAMBER,
High Court, Chennai - 104
**Cell : 72 00 00 14 14,**

**: 86374 65756**
Email ID : magalirurimai@gmail.com

Owned, Published & Printed by Premavathy Ashokumar, Printed at New Karthik Printers, No.26A, 2nd Street, Bharatheeswarar Colony, Kodambakkam, Chennai - 600 024. and Published from D.No.13/1, Dhayasadan Road, Koyambedu, Chennai - 600 107, Editor : Mr. Tamil Selvan

# பெண்களின் மகிழ்ச்சி இந்த 5 ல் இருக்கிறது!



ஆண்கள் பெண்கள் இருவரில் யார் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று ஒரு கேள்வியை முன்வைத்தால் 70% பேர் சொல்லும் பதில் ஆண்கள்தான். ஆனால் பெண்களுக்கு மகிழ்ச்சி வரும் சூழ்நிலைகள் குறைவே அதற்கு மிக முக்கிய காரணம் அவர்களின் வாழ்வியல் கட்டமைப்புதான்.

ஒரு ஆண் தன்னை உற்சாகமாக வைத்துக் கொள்ள தவறுவதில்லை. ஆனால் ஒரு பெண் இந்த சமுதாயத்திற்கும் தன்னை சுற்றி இருக்கும் சூழ்நிலைக்கு வளைந்து நெளிந்து கொடுத்து செய்வதால் உற்சாகமாக இருப்பதற்கான சூழ்நிலையை அவள் இழக்கிறாள்.

பெண்களும் சில விஷயங்களைக் கடைப்பிடித்தால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் 5 குறிப்புகளைப் படியுங்கள். உங்கள் மனதில் ஒரு தெளிவான முடிவு கிடைக்கும். பிறகு பாருங்கள் பெண்களே உங்கள் மனதிலும் எப்பொழுதும் மகிழ்ச்சியும் உற்சாகமும் கூடி கொண்டிருக்கும்.

**1. ஒரு வழிகாட்டியைக் கண்டுபிடிக்கவும்:**

ஒரே மாதிரியாகச் சிந்திப்பவர்களுக்கு இடையில் ஈர்ப்பு ஏற்படுவது இயல்பு. பெண்கள் தமக்கான வழிகாட்டியைக் கண்டறிவது அவர்களுக்கு மிகப்பெரிய பலம். எல்லாச் சூழலிலும் சிறந்த முடிவுகளை எடுக்க வழிகாட்டிகளே உதவுகின்றனர். இந்த முடிவுகள் மகிழ்ச்சியான வாழ்க்கைச் சூழலை உங்களுக்கு அளிக்கும். உங்களைப் போன்று வாழ்க்கைப் பின்னணியும், அனுபவமும் உள்ளவர்களிடம் ஆலோசனை கேட்க தயங்காதீர்கள். உங்களது பலவீனங்களை அடையாளப்படுத்தி அவர்கள் மனக்கசப்பை ஏற்படுத்த மாட்டார்கள். அதேபோல் உங்களது கருத்துகளை ஏற்றுக்கொள்வதிலும் அவர்கள் வெளிப்படையாக இருப்பார்கள்.

**2. பொழுதுபோக்கு அல்லது ஆர்வத்தைப் பெறுங்கள்:**

ஆழமான திருப்தியே உங்களுக்கு அதிகளவு மகிழ்ச்சியைக் கொடுக்கும். அப்படி உங்களுக்கே என்று பிடித்தமானவற்றைக் கண்டறிந்து பட்டியலிடுங்கள். விளையாட்டு, கலை, இலக்கியம், சமையல், இசை, கார் ஓட்டுதல் என்று எதுவாகவும் இருக்கலாம். ஆர்வம் அல்லது பொழுதுபோக்கில் ஈடுபடும்போது மனம் ரிலாக்ஸ் ஆகும். இந்த வேளைகளில் ஈடுபடும்போது உங்களுக்கு நேரம் போவதே தெரியாது.

**3. சுயமரியாதையை வளர்த்துக்கொள்ளுங்கள்:**

மூளையின் ஒரு பகுதியாக இருக்கிறது முன்புற சிங்குலேட் கார்டெக்ஸ், பெண்களுக்கு மூளையின் இந்தப் பகுதி, உண்மையில் ஆண்களுக்கு இருப்பதைவிடப் பெரியது. எனவே இது எதிர்மறையான எண்ணங்களைப் பெண்களுக்கு உருவாக்கும். அழகு, திறமை மற்றும் புத்திசாலித்தனம் பற்றிய சந்தேகங்களையும் ஏற்படுத்தும். எனவே உங்கள் சுயமரியாதையைச் சிதைக்கும் அனைத்து சந்தேகங்களுக்கும் நீங்கள் விலக்காக இருக்கலாம். சுயமரியாதையை வளர்த்துக்கொள்வதில் எப்போதும் கவனமாக இருங்கள்.

**4. அன்பான உறவுகளை மறந்துவிடாதீர்கள்:**

மகிழ்ச்சியான பெண்கள் எப்போதும் அன்பான உறவுகளுக்கு சொந்தக்காரர்களாக உள்ளனர். சரியான காலணியை அணிய முடியவில்லை என்று வருத்தப்படுவதை விட, அதைத் தூக்கி எறிந்துவிட்டு பொருத்தமான காலணியை அணிவது நிம்மதி அல்லவா! இதுபோன்ற சின்னச் சின்ன சங்கடங்களைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்காமல் பெரிய இலக்குகளை உருவாக்கி, அவற்றை அடைய முயற்சி செய்யுங்கள். அன்பான உறவுகள் பெரிய இலக்குகளை அடைய உதவியாக இருப்பார்கள்.

**5. நன்றியுடன் இருங்கள்:**

மகிழ்ச்சியான பெண்கள் எப்போதும் நன்றியுடன் இருப்பார்கள். நன்றிக்கு உரியவர்களின் பெயர்களை நினைவு கூரலாம். வாழ்க்கை ஒரு விலைமதிப்பற்ற பரிசு என்று நினைப்பது முக்கிய விஷயம். உங்களால் முடிந்தவரை இந்த வாழ்க்கையில் இதுவரை உணர்ந்த மகிழ்ச்சியான தருணங்களுக்காக நன்றி சொல்லுங்கள். மகிழ்ச்சி பல மடங்காக அதிகரிக்கும்.

எல்லா உணர்வுகளைப் போலவே மகிழ்ச்சியும் முக்கியம். மகிழ்ச்சியாக இருப்பதற்கான உரிமை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது. சிறு தயக்கமும் இன்றி உங்களது மகிழ்ச்சியை புன்னகையால் வெளிப்படுத்துங்கள்.

நிருபர் : J.பொன்னுராஜம், புதுச்சேரி மாநிலம்



# மக்களின் கதறல்

மதுரை மாவட்டம் அழகர் கோவில் பிரசித்தி பெற்ற 18 படி கருப்பண்ணசாமி திருக்கோவில் உள்ளது. அதில் கருப்பண்ணசாமியின் கதவுகள் வருடத்தில் இரண்டு முறை திறக்கப்படும். அப்படி 21-07-2024 அன்று மாலை சரியாக 7.00 மணி அளவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் முன்பு திறக்கப்பட்டது. அதுவும் 5 நிமிடம் கூட இல்லை. அதனால் பக்தர்கள் நிறைய பேர் பார்க்க முடியாமல் ஏமார்ந்து வருத்தத்துடன் கலைந்து போனார்கள்.அவர்கள் வேண்டு கொள் இரண்டு டிவி யோ அல்லது திரையோ வைத்திருந்தால் கூட நெரிசலும் இருக்காது மக்கள் அவ்வளவு நேரம் காத்திருந்து ஏமாற்றம் அடைய மாட்டார்கள். அசம்பாவிதம் நடப்பதை தடுக்கலாம். என்பது மக்களின் வேண்டு கொளாகவும்.கருத்தாகவும் உள்ளது.

ப.ஜீவமாணிக்கம்
– துணை ஆசிரியர்

## வாழ்க்கையில் எந்த மாதிரியான பழக்கங்களைக் குழந்தைகளுக்குக் கற்றுத் தர வேண்டும்?




- பிடிவாதம் பிடிக்காமல் இருப்பது,
- பெரியவர்களிடம் பணிவோடு நடந்து கொள்வது,
- உணவுப் பொருளோ, விளையாட்டுப் பொருளோ பகிரும் பழக்கம்,
- பொருட்களை அதனதன் இடத்தில் வைப்பது,
- வயதிற்கேற்ப பெற்றோருக்கு உதவி செய்வது,
- தவறு செய்தால் யாராயிருந்தாலும் மன்னிப்பு கேட்பது,
- மற்றவர் பொருளுக்கு ஆசைப்படாதது,
- வேண்டிய இடத்தில் தயவு செய்து, மன்னியுங்கள், நன்றி ஆகிய சொற்களைப் பயன்படுத்துவது,
- விருந்தினர்களோ மற்றவர்களோ பரிசுப் பொருட்கள் அளித்தால் பெற்றோரின் அனுமதிக்குப் பிறகே நன்றி கூறிப் பெற்றுக் கொள்வது,
- பொது இடங்களில் நாகரிகமாக நடந்து கொள்வது,
- வெளி இடங்களுக்குச் செல்கையில்கூட்ட நெரிசல்களில் பெரியவர்களின் கையைப் பிடித்துக் கொண்டு செல்வது,
- ஆகிய பழக்கங்களைக் குழந்தைக்குப் புரியும் வயதிலேயே புரிந்து கொள்கிறாா் போலப் பழக்கினால் பெற்றோருக்கு நல்லது.

காதர் பாஷா
– நிருபர் காஞ்சிபுரம் மாவட்டம்

# தானம் செய்வது புண்ணியம்

ஒரு சிறுவனுக்கு வாழைப்பழம் ஒன்று கிடைத்தது! தெரிந்தவர் அவனுக்கு அளித்து! 'சாப்பிடு' என்று கொடுத்தார்!!

சிறுவன் பழத்தை வாங்கிக்கொண்டான்! பழத்தை தொட்டுப் பார்த்ததுமே? சற்று 'கொழகொழ' வென்று இருந்ததால்! அதை அவன் சாப்பிட விரும்பவில்லை!!

அந்தப் பழத்தை? அப்பாவிடம் கொடுத்தான்! 'நீ சாப்பிடு! உனக்குத்தானே கொடுத்தார்?' என்றார் அவனுடைய அப்பா!!

'எனக்கு இப்பொழுது வேண்டாம்! நீங்கள் சாப்பிடுங்கள்' என்றான் சிறுவன்!!



சிறுவனின் தந்தை பழத்தைப் பார்த்தார்! பழம் சாப்பிடும்படியான நிலையில் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டார்! மனைவியை அழைத்தார்!!

'இந்தப் பழத்தை சாப்பிடு! நானே சாப்பிடுவேன்! ஆனால்? எனக்கு பசியில்லை'! என்று கூறி! மனைவிக்கு அப்பழத்தை தானம் செய்தார்!!

மனைவி பழத்தை சாப்பிடலாம் என்று தான் கையில் வாங்கிக் கொண்டாள்! வாங்கிய பிறகுதான் பழம் மிகவும் பழுத்து விட்டது என்பதை அறிந்தாள்! தோலை உரித்துப் பார்த்தால் ஒருவேளை அது அழுகிய பழமாகவும் இருக்கக்கூடும் என்று எண்ணினாள்?

அதனால்! அவள் அப்பழத்தை உரிக்காமலே? இதையாருக்கு கொடுக்கலாம் என்று யோசித்தாள்? அப்போது வீட்டு வேலை செய்யும் வேலைக்காரப் பெண் வந்தாள்!! 'வேளாயி! இங்க வா! ரொம்ப களைப்பா இருக்கிறாயே? இந்தா இந்தப் பழத்தை சாப்பிடு'! என்று கையில் இருந்த வாழைப்பழத்தை அவளிடம் தந்தாள்!! பழத்தைப் பெற்றுக்கொண்ட வேலைக்காரி! அதைத் தின்ன முடியாது என்பதை அறிந்து கொண்டாள்! எஜமானி கொடுத்ததை வேண்டாம் என்று சொல்ல தயக்கமாக இருந்ததால்? கொடுத்ததை வாங்கிக் கொண்டாள்!!

பிறகு வாசல் பக்கம் சென்றாள்! பழத்தைத் தூக்கிப் போட்டுவிடலாம் என்ற எண்ணத்தில் தான் வாசற்பக்கம் வேளாயி வந்தாள்! அப்போது! தெருவில் பால்காரன் பசு மாட்டுடன் சென்றதைப் பார்த்தாள்!!

அழுகிய பழத்தைத் தின்ன முடியாமல் தூக்கிப் போடுவதை விடவும்? பசுவுக்கு அளித்தால்? புண்ணியம் கிடைக்குமே! என்று நினைத்தாள்! பழத்தைக் கொண்டு போய் பால்காரனிடம் கொடுத்து! 'பசுவுக்கு இதைக் கொடுத்துவிடு' என்றாள்!!

பால்காரன் பழத்தை வாங்கினான்! ஏம்மா! அழுகிய இந்தப் பழத்தை சாப்பிட்டால்? பசுவுக்கு ஒத்துக்கொள்ளாது என்று கூறி! குப்பைத் தொட்டியில் விட்டெறிந்தான்!!

பழம் நல்ல நிலையில் இருந்தால்? சிறுவனே அதை சாப்பிட்டிருப்பான்! நன்றாக இல்லை என்று தெரிந்ததால்தான்? சிறுவன் அப்பாவுக்கும்! அப்பா? அம்மாவுக்கும்! அம்மா? வேலைக்காரிக்கும் !வேலைக்காரி? பசுவுக்கும்! தானம் செய்தார்கள்!!

தனக்குத் தேவையற்றது என்று நினைப்பதை? தனக்கு உதவாது என்று தோன்றியதை? பிறருக்குக் கொடுப்பதற்குப் பெயர் தானமல்ல! என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்!!

தானம் என்பது வேறு!!

தானம் செய்வது பெரும் புண்ணியம்! அதையும்? யாருக்க தானம் செய்தால்? மிகவும் புண்ணியம் என்பதை அறிந்து செய்வது மிகச் சிறப்பு!!

பஞ்சபூதாய நமஸ்!!

ப்ரசன்ன குரு!!

சித்தர் வழி!!

செந்தில்குமார் மாணிக்கம், ஒருங்கிணைப்பாளர்


## விளம்பரக் கட்டணம்

Front Inner - Rs.15,000
Back Inner - Rs.12,000
Outer - Rs.15,000

Black & White Full Page - Rs.5,000
Black & White ½ Page - Rs.2,500
Black & White ¼ Page - Rs.1,500

# அக்கம் பக்கத்தினரே அசந்துடுவாங்க!

## (அழகுக் குறிப்புகள் : **மஞ்சள் - அழகின் பொன் மருந்து**)




அழகு நிபுணர்: திருமதி. **C. சத்யா விஜய் ஆனந்த்**

தொகுத்தவர் : **Dr. B. மோகனப்பிரியா பிரகாஷ் குமார்**


* அழகை விரும்பாத பெண்கள் உண்டோ? அழகை மேம்படுத்திக் கொள்ள பெண்கள் பல வழிகளைக் கையாண்டு வந்தாலும், இயற்கை அழகுக்கு நிகரான அழகு எதுவுமில்லை என்பதே நிதர்சனம். அப்படிப்பட்ட இயற்கை அழகு சாதனப் பொருட்களில் தலைசிறந்தது நம் சமையலறையில் எப்போதும் இருக்கும் மஞ்சள். ஆம்! அற்புதமான மருத்துவ குணங்களை கொண்ட மஞ்சள், சரும பராமரிப்பில் பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது

**.மஞ்சளின் அழகு ரகசியங்கள்:**

* சருமப் பொலிவு: மஞ்சளில் உள்ள குர்குமின் என்ற வேதிப்பொருள், சருமத்திற்கு இயற்கையான பொலிவை அளிக்கும். இது சரும செல்களின் புதுப்பித்தலை ஊக்குவித்து, சருமத்தை மென்மையாகவும், பொலிவாகவும் மாற்றும்.

* முகப்பருவுக்கு சிறந்த மருந்து: மஞ்சளில் உள்ள ஆண்டிசெப்டிக் மற்றும் அழற்சி எதிர்ப்பு பண்புகள், முகப்பரு மற்றும் பருக்களை உண்டாக்கும் பாக்டீரியாக்களை எதிர்த்துப் போராடி, சருமத்தை சுத்தப்படுத்துகிறது.

* வயதான தோற்றத்தை தள்ளிப்போடும்: மஞ்சளில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள், சருமத்தின் வயதான அறிகுறிகளைத் தாமதப்படுத்தி, சுருக்கங்கள் மற்றும் கோடுகளை குறைக்க உதவுகின்றன.

* சரும நிறத்தை சீராக்கும்: மஞ்சள், சரும நிறத்தை சீராக்கி, கரும்புள்ளிகள் மற்றும் சரும நிற மாற்றங்களை குறைக்க உதவுகிறது. இதனால் சருமம் இளமையாகவும், ஒளிரும் தன்மையுடனும் காட்சியளிக்கும்.

* உச்சந்தலையில் பொடுகுத் தொல்லை நீங்க: மஞ்சளின் அழற்சி எதிர்ப்பு பண்புகள், உச்சந்தலையில் பொடுகு மற்றும் அரிப்பை குறைக்க உதவுகின்றன.

**மஞ்சளை அழகுப் பொருளாகப் பயன்படுத்தும் வழிகள்:**

**1. மஞ்சள் ஃபேஸ் பேக்:**

தேவையான பொருட்கள்: மஞ்சள் தூள் - 1/2 தேக்கரண்டி, கடலை மாவு - 1 தேக்கரண்டி, பால்/தயிர்/தேன் – தேவையான அளவு செய்முறை: அனைத்து பொருட்களையும் ஒன்றாக கலந்து முகத்தில் தடவவும். 15-20 நிமிடங்கள் கழித்து முகத்தை வெதுவெதுப்பான நீரில் கழுவவும். இந்த ஃபேஸ் பேக் சருமத்திற்கு பொலிவையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும்.

**2. மஞ்சள் உடல் ஸ்க்ரப்:**

தேவையான பொருட்கள் : மஞ்சள் தூள் - 1 தேக்கரண்டி, பாசிப்பருப்பு மாவு - 2 தேக்கரண்டி, பால் - தேவையான அளவு

செய்முறை : அனைத்து பொருட்களையும் கலந்து ஸ்க்ரப் போல் தயாரிக்கவும். உடலில் மென்மையாக தேய்த்து, 10 நிமிடங்கள் ஊற வைத்து குளிக்கவும். இது இறந்த செல்களை நீக்கி, சருமத்தை மென்மையாக்கும்.

**3. மஞ்சள் ஹேர் மாஸ்க்:**

தேவையான பொருட்கள்: மஞ்சள் தூள் - 1 தேக்கரண்டி, தேங்காய் எண்ணெய் – 2 தேக்கரண்டி

செய்முறை: இரண்டையும் நன்றாக கலந்து உச்சந்தலையில் தடவவும். 30 நிமிடங்கள் ஊற வைத்து, பின்னர் ஷாம்பு கொண்டு அலசவும். இது பொடுகுத் தொல்லை நீங்கி, முடிக்கு பளபளப்பை உண்டாக்கும்.

**4.மஞ்சள் பால்:**

தேவையான பொருட்கள் : மஞ்சள் தூள் - 1/4 தேக்கரண்டி, வெதுவெதுப்பான பால் – 1 கப்

செய்முறை : இரண்டையும் கலந்து பருகவும். இது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, சருமத்தை உள்ளிருந்து பொலிவாக்கும்.

* **கூடுதல் குறிப்பு:**

* எப்போதும் தூய்மையான, கலப்படமில்லாத மஞ்சளைப் பயன்படுத்துவது சிறந்தது.

* உங்கள் சருமத்திற்கு ஏற்றவாறு, மஞ்சளின் அளவைக் குறைக்கவோ அல்லது அதிகரிக்கவோ செய்யலாம்.

* மஞ்சள், பல நூற்றாண்டுகளாகப் பெண்களின் அழகு ரகசியமாகப் போற்றப்படுவதில் ஆச்சரியமில்லை. இயற்கையின் இந்த பொன் மருந்தை உங்கள் அழகுப் பராமரிப்பில் சேர்த்துக் கொண்டு, அதன் அற்புத பலன்களை அனுபவியுங்கள்.

* (குறிப்பு: இவை பொதுவான அழகு குறிப்புகள் மட்டுமே. உங்கள் சருமத்திற்கு ஒவ்வாமை இருப்பின், மருத்துவரின் ஆலோசனை பெற்றுப் பின்பற்றுவது நல்லது.)

# ஆகஸ்ட் மாத ராசி பலன்கள்



ஜோதிடச்சுடர்.
**Dr.N.ஞானரதம்** M.A., M.PHIL,(Eco) M.L, (law) Dip.Astro.,B.A.,(Astro)M.A.,( ASTRO) Ph.D.,
105, பாண்டிபஜார், தி.நகர், சென்னை – 600 017, செல் : 9381090389.

**மேஷம்** பெண்கள் தங்கள் வியாபாரத்தில் புதிய தொழில்நுட்பங்களை நுழைப்பார்கள். பணவரவுக்கு பஞ்சம் இல்லை. குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் நீங்கி நிம்மதி பெருமூச்சு விடுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களது வருமானம் உயரும். நண்பர்களிடையே மகிழ்ச்சி நிலவும். தம்பதிகளிடையே அன்பு அதிகரிக்கும். எதிரிகள் சரணடைவர்.



வழிபாடு : செவ்வாய் கிழமை அன்று துர்கைக்கு எலுமிச்சம் பழம் விளக்கு ஏற்றுவது நல்லது.

**ரிஷபம்** : இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். பிள்ளைப்பேறு இல்லாத தம்பதிகளுக்கு நற்செய்தி கிட்டும். பெண் மாணவர்களின் திட்டங்கள் வெற்றி பெறும். கணவன் மனைவியிடையே மூன்றாம் நபர்களின் தலையீட்டை தடுப்பது நல்லது. உறவினர்களிடம் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் மேம்படும்.



வழிபாடு : மஹாலட்சுமிக்கு வெள்ளிக் கிழமை அன்று நெய் தீபம் ஏற்றுவது நல்லது.

**மிதுனம்** : பங்குச் சந்தையில் கவனம் தேவை. புது தொழில் துவங்குவீர்கள். வியாபாரம் விருத்தியடையும். உடல் நலம் சிறக்கும். மனதிற்கினிய சம்பவம் நடக்கும். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்துபோகும். பிள்ளையால் நன்மை உண்டு. அரசால் அனுகூலம் உண்டு. சக பணியாளர்கள் ஒத்துழைப்பர்.



வழிபாடு : புதன் கிழமை அன்று சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றுவது நல்லது.

**கடகம்** : கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உடல்நிலை நன்றாக இருக்கும். மார்கெட்டிங்பிரிவினர்களுக்கு அதிக கமிஷன் கிடைக்கும். தம்பதிகள் விட்டுக்கொடுத்துச் செல்வர். தங்கள் பிள்ளையின் நடவடிக்கைகளை கவனிப்பது நல்லது. உத்யோகஸ்தர்களுக்கு சலுகைகள் கிடைக்கும்.



வழிபாடு : திங்கட் கிழமை அன்று சாந்த நாயகி அம்மன் அல்லது மாரியம்மனுக்கு தீபம் ஏற்றுவது நல்லது.

**சிம்மம்** : வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்கள் உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். மனதில் தன்னம்பிக்கை ஒளிரும். மார்கெட்டிங் பிரிவினர்களுக்கு சலுகை அதிகரிக்கும். கடன் கொடுக்கும் முன் நன்கு சிந்திக்கவும். ஆன்மீக யாத்திரை செய்வீர்கள். உடல் நலம் சிறப்பாக இருக்கும்.



வழிபாடு : அய்யனாரை சனி கிழமை அன்று தரிசிப்பது நல்லது. முடிந்தால் அன்றே பெருமாளையும் தரிசிப்பது நல்லது.

**கன்னி** : நீண்டநாட்களாக தங்களுக்கு ஒரு துணை இல்லையே என்றகவலை நீங்கும். வெளிநாட்டு மற்றும் வெளியூரில் உள்ளவர்களால் நன்மை நிகழும். குடும்பத்தில் கணவன் உறவினர்களால் ஏற்பட்ட சிக்கல்கள் நீங்கும். பெண்கள் தங்களுடைய கைவினைத் தொழிலில் முன்னேற்றம் காண்பர். தேகம் பளிச்சிடும்.



வழிபாடு : பெருமாளுக்கு புதன் கிழமை அன்று துளசி மாலையை சாத்துவது நல்லது.

**துலாம்** : குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். வியாபாரிகளுக்கு ஆர்டர்கள் குவியும். குடும்பத்தலைவிகள் வரவுக்கேற்ப செலவு செய்வர். வெளியூர் பயணங்கள் மேற்கொள்வீர்கள். பெற்றோர்களின் நம்பிக்கையை காப்பாற்றுவீர்கள். வரவு செலவு செய்யும் போது மிகவும் பணம் திரும்பப் பெறுவீர்கள்.



வழிபாடு : கால பைரவருக்கு சிவப்பு மலர் மாலையை சாத்துவது நல்லது.

**மேஷம்** பெண்கள் தங்கள் வியாபாரத்தில் புதிய தொழில்நுட்பங்களை நுழைப்பார்கள். பணவரவுக்கு பஞ்சம் இல்லை. குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் நீங்கி நிம்மதி பெருமூச்சு



விடுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களது வருமானம் உயரும். நண்பர்களிடையே மகிழ்ச்சி நிலவும். தம்பதிகளிடையே அன்பு அதிகரிக்கும். எதிரிகள் சரணடைவர்.

வழிபாடு : செவ்வாய் கிழமை அன்று துர்கைக்கு எலுமிச்சம் பழம் விளக்கு ஏற்றுவது நல்லது.

**ரிஷபம்** : இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். பிள்ளைப்பேறு இல்லாத தம்பதிகளுக்கு நற்செய்தி கிட்டும். பெண் மாணவர்களின் திட்டங்கள் வெற்றி பெறும். கணவன் மனைவியிடையே மூன்றாம் நபர்களின் தலையீட்டை தடுப்பது நல்லது. உறவினர்களிடம் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் மேம்படும்.



வழிபாடு : மஹாலட்சுமிக்கு வெள்ளிக் கிழமை அன்று நெய் தீபம் ஏற்றுவது நல்லது.

**மிதுனம்** : பங்குச் சந்தையில் கவனம் தேவை. புது தொழில் துவங்குவீர்கள். வியாபாரம் விருத்தியடையும். உடல் நலம் சிறக்கும். மனதிற்கினிய சம்பவம் நடக்கும். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் வந்துபோகும். பிள்ளையால் நன்மை



உண்டு. அரசால் அனுகூலம் உண்டு. சக பணியாளர்கள் ஒத்துழைப்பர்.

வழிபாடு : புதன் கிழமை அன்று சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றுவது நல்லது.

**கடகம்** : கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உடல்நிலை நன்றாக இருக்கும். மார்கெட்டிங்பிரிவினர்களுக்கு அதிக கமிஷன் கிடைக்கும். தம்பதிகள் விட்டுக்கொடுத்துச் செல்வர். தங்கள் பிள்ளையின் நடவடிக்கைகளை



கவனிப்பது நல்லது. உத்யோகஸ்தர்களுக்கு சலுகைகள் கிடைக்கும்.

வழிபாடு : திங்கட் கிழமை அன்று சாந்த நாயகி அம்மன் அல்லது மாரியம்மனுக்கு தீபம் ஏற்றுவது நல்லது.

**சிம்மம்** : வெளியூர் பயணம் வெற்றி தரும். பெண்கள் உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். மனதில்



தன்னம்பிக்கை ஒளிரும். மார்கெட்டிங் பிரிவினர்களுக்கு சலுகை அதிகரிக்கும். கடன் கொடுக்கும் முன் நன்கு சிந்திக்கவும். ஆன்மீக யாத்திரை செய்வீர்கள். உடல்நலம் சிறப்பாக இருக்கும்.

வழிபாடு : அய்யனாரை சனி கிழமை அன்று தரிசிப்பது நல்லது. முடிந்தால் அன்றே பெருமாளையும் தரிசிப்பது நல்லது.

**கன்னி** : நீண்ட நாட்களாக தங்களுக்கு ஒரு

# மனைவி என்பவள் உன்னில் ஒரு பாதி

கணவனுக்கும் மனைவிக்கும் சிறிய தகராறு. தகராறு பெரிதாகி ஒருவரோடு ஒருவர் பேசுவதை நிறுத்தி விட்டனர்.

ஒருநாள் கணவன் தொழில் விசயமாக அதிகாலை 5 மணிக்கு புறப்பட வேண்டியிருந்தது. மனைவியிடம் நேரடியாக சொல்ல சுயமரியாதை இடம் தரவில்லை. அதிகாலை 5 மணிக்கு எழுப்பி விடு என ஒரு தாளில் எழுதி மனைவியின் தலையணையின் கீழ் வைத்துவிட்டு மனைவி காலையில் எழுப்பி விடுவாள் என்ற நம்பிக்கையில்தூங்கி விட்டான்.

காலையில் எழுந்து நேரத்தை பார்த்தால் மணி 7. பயங்கர கோபத்தோடு மனைவியை பார்த்தான். ஏன் என்னை எழுப்பி விடவில்லை என கோபமாக கேட்டான்.மனைவி அமைதியாக கணவனின் தலையணையைக் காட்டினாள். அதன் கீழ் ஒரு தாளில் மனைவி எழுதி வைத்திருந்தாள் 'மணி 5 ஆகிவிட்டது எழுந்திருங்கள்' என்று.

இந்தக் கதையில் சுயமரியாதையைக் காப்பாற்ற வேண்டி சீட்டில் எழுதி வைத்த கணவன், காலை தாமதமாக எழுந்தவுடனே கோபத்தில் சுயமரியாதையை மறந்து ஏன் என்னை எழுப்பி விடவில்லை என்று கேட்கிறார். முதல் நாள் இரவு கொஞ்சம் தனது சுயமரியாதையை மறந்து மனைவியிடம் எழுப்பி விடச் சொல்லியிருந்தால் பயணம் தடைபட்டு இருக்காது.

இதே தவறைத்தான் இன்று நம்மில் பலரும் செய்து கொண்டு இருக்கிறோம். முதலில் சுயமரியாதையை யாரிடம் எங்கே காட்ட வேண்டும் என்று தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

மனைவி என்பவள் உன்னில் ஒரு பாதி உன் உயிரில் ஒரு பாதி உன் உடலில் ஒரு பாதி

அப்படிப்பட்ட மனைவியிடம் கொஞ்சம் ஈகோவை மறக்க பழகுங்கள். இது ஆண்களுக்கு மட்டுமல்ல, பெண்களும் இதே தவறைத்தான் செய்கிறார்கள். இதனால் பாதிக்கப்படுவது இருவருமேதான்.

தலைமை ஆசிரியர் : S.J.சூசைராஜ்

# கருணாமூர்த்தி வள்ளலார் அறக்கட்டளை

**பார்வையற்றோருக்கு ஒரு ஒளிவிளக்கு**

சென்னை மதுரைவாயலில், பார்வையற்ற குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றும் கருணாமூர்த்தி வள்ளலார் அறக்கட்டளையின் நிறுவனர் திருமதி பிரேமாவதி அசோக்குமார்,



நமது 'மகளிர் உரிமை' இதழின் ஆசிரியராகவும் பணியாற்றும் இவர், தனது அயராத உழைப்பும், அன்பும் நிறைந்த இந்த அறக்கட்டளையின் செயல்பாடுகள், சவால்கள், சாதனைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து நம்முடன் ஒரு சிறப்பு நேர்காணலில் பகிர்ந்து கொள்கிறார்.



**பெண்களின் சமூக சேவை – ஒரு வரப்பிரசாதம்:**

'பெண்கள் சமூக சேவையில் ஈடுபடுவது மிகவும் முக்கியம். அவர்களின் அன்பு, கருணை, பொறுமை போன்ற குணங்கள் சமூகத்தில் நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்தும். அன்னை தெரசா, ஜெயலலிதா, இந்திரா காந்தி போன்ற பெண் சாதனையாளர்கள் நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார்கள்,' என்று தனது கருத்தை முன்வைக்கிறார்.

**உந்துதலும், உத்வேகமும்:**

'இரண்டு வருடங்களுக்கு முன், மொகப்பேரில் உள்ள ஒரு பார்வையற்றோர் பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கு இருந்த குழந்தைகளின் நிலை என் மனதை உலுக்கியது. அடிப்படை வசதிகள்கூட இல்லாமல், பரிதவிக்கும்



அந்தப் பிஞ்சு உள்ளங்களைப் பார்த்தபோது, ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் என்னுள் வேரூன்றியது. அப்படித்தான் 'கருணாமூர்த்தி வள்ளலார் அறக்கட்டளை' பிறந்தது,' என்று தனது அறக்கட்டளைப் பணியைப் பற்றி பேசத் தொடங்குகிறார் திருமதி பிரேமாவதி.

**அறக்கட்டளையின் அரும்பணி:**

'இன்று எங்கள் அறக்கட்டளையில் 12 குழந்தைகள் உள்ளனர். அவர்களுக்கு உணவு, உடை, தங்குமிடம், கல்வி என அனைத்தையும் நாங்கள் வழங்குகிறோம். சில குழந்தைகள் சென்னையில் உள்ள கல்லூரிகளில் பட்டப்படிப்பும் படிக்கின்றனர். எங்களின் சில குழந்தைகளுக்கு



பெற்றோர்கள் இருந்தும், அவர்களால் தங்கள் குழந்தைகளுக்குத் தேவையானவற்றைச் செய்ய முடியாத ஏழ்மை நிலை. எனவே, அவர்களுக்கும் நாங்கள் உதவி வருகிறோம்,' என்று பெருமிதத்துடன் கூறுகிறார் அவர்.

**சவால்களும், சாதனைகளும்:**

இந்தப் பயணம் அவ்வளவு எளிதானதாக இல்லை. 'ஆரம்பத்தில் பல சவால்களை எதிர்கொள்ள

**பார்வையற்றோருக்கு ஒரு ஒளிவிளக்கு**

சென்னை மதுரைவாயலில், பார்வையற்ற குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றும் கருணாமூர்த்தி வள்ளலார் அறக்கட்டளையின் நிறுவனர் திருமதி பிரேமாவதி அசோக்குமார்.

நமது 'மகளிர் உரிமை' இதழின் ஆசிரியராகவும் பணியாற்றும் இவர், தனது அயராத உழைப்பும், அன்பும் நிறைந்த இந்த அறக்கட்டளையின் செயல்பாடுகள், சவால்கள், சாதனைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து நம்முடன் ஒரு சிறப்பு நேர்காணலில் பகிர்ந்து கொள்கிறார்.

**பெண்களின் சமூக சேவை – ஒரு வரப்பிரசாதம்:**

'பெண்கள் சமூக சேவையில் ஈடுபடுவது மிகவும் முக்கியம். அவர்களின் அன்பு, கருணை, பொறுமை போன்ற குணங்கள் சமூகத்தில் நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்தும். அன்னை தெரசா, ஜெயலலிதா, இந்திரா காந்தி போன்ற பெண் சாதனையாளர்கள் நமக்கு முன்மாதிரியாக இருக்கிறார்கள்,' என்று தனது கருத்தை முன்வைக்கிறார்.

**உந்துதலும், உத்வேகமும்:**

'இரண்டு வருடங்களுக்கு முன், மொகப்பேரில் உள்ள ஒரு பார்வையற்றோர் பள்ளிக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கு இருந்த குழந்தைகளின் நிலை என் மனதை உலுக்கியது. அடிப்படை வசதிகள்கூட இல்லாமல், பரிதவிக்கும் அந்தப் பிஞ்சு உள்ளங்களைப் பார்த்தபோது, ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் என்னுள் வேரூன்றியது. அப்படித்தான் 'கருணாமூர்த்தி வள்ளலார் அறக்கட்டளை' பிறந்தது,' என்று தனது அறக்கட்டளைப் பணியைப் பற்றி பேசத் தொடங்குகிறார் திருமதி பிரேமாவதி.

**அறக்கட்டளையின் அரும்பணி:**

'இன்று எங்கள் அறக்கட்டளையில் 12 குழந்தைகள் உள்ளனர். அவர்களுக்கு உணவு, உடை, தங்குமிடம், கல்வி என அனைத்தையும் நாங்கள் வழங்குகிறோம். சில குழந்தைகள் சென்னையில் உள்ள கல்லூரிகளில் பட்டப்படிப்பும் படிக்கின்றனர். எங்களின் சில குழந்தைகளுக்கு பெற்றோர்கள் இருந்தும், அவர்களால் தங்கள் குழந்தைகளுக்குத் தேவையானவற்றைச் செய்ய முடியாத ஏழ்மை நிலை. எனவே, அவர்களுக்கும் நாங்கள் உதவி வருகிறோம்,' என்று பெருமிதத்துடன் கூறுகிறார் அவர்.

**சவால்களும், சாதனைகளும்:**

இந்தப் பயணம் அவ்வளவு எளிதானதாக இல்லை. 'ஆரம்பத்தில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.' என்று திருமதி பிரேமாவதி நினைவு கூர்கிறார். 'குழந்தைகளுக்கு தங்குமிடம் தேடுவது மிகவும் கடினமாக இருந்தது. பலர் பார்வையற்ற குழந்தைகளை வாடகைக்கு வைத்துக் கொள்ள மறுத்துவிட்டனர். பல இடங்களில் அவமானப்படுத்தப்பட்டோம். ஆனால் நாங்கள் மனம் தளரவில்லை.'

இன்று, அறக்கட்டளை மாதம் 9,000 ரூபாய்க்கு ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, அதில் குழந்தைகளைத் தங்க வைத்துள்ளது. இந்த அறக்கட்டளையின் மிகப்பெரிய சாதனை, பல குழந்தைகளை கல்லூரியில் சேர்த்து பட்டம் பெற வைத்திருப்பதுதான்.

**நிதி உதவி:**

'இதுவரை எங்கள் அறக்கட்டளைக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டதில்லை. பல நல்ல உள்ளங்கள் தங்களால் இயன்ற உதவிகளை செய்து வருகின்றனர். ஒரு கல்லூரிப் பேராசிரியர் மாதாமாதம் உணவுக்கான பருப்பு வகைகள் வாங்கித் தருகிறார். ஐடி நிறுவன ஊழியர்கள் புத்தகங்கள் வாங்கித் தருகின்றனர். இப்படி பலர் எங்களுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள்,' என்று நன்றியுடன் கூறுகிறார்.

**தனித்துவமான அணுகுமுறை:**



வழிநடத்துகிறோம்,' என்று திருமதி பிரேமாவதி



நம்பிக்கையை காப்பாற்றுவதில் நாங்கள் உறுதியாக



# தென்காசி மாவட்டம்

## தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை

தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை தென்காசி மாவட்டம் சார்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் செயலாளர் மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் முன்னிலையில் திருமதி பானுப்ரியா மாவட்ட அலுவலர் தென்காசி அவர்கள் தலைமையில் சுரேஷ் ஆனந்த் உதவி மாவட்ட அலுவலர், மாவட்ட அலுவலகம், தென்காசி, பிரதீப் குமார் உதவி மாவட்ட அலுவலர் தென்காசி நிலையம் ஆகியோரால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அலுவலக வளாகத்தில் துறையின் சிறப்பு மீட்பு உபகரணங்கள் காட்சிப் படுத்தியும் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகளின் போதும், வெள்ள காலங்களிலும் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பன பற்றிய போலி ஒத்திகை பயிற்சி செய்து காண்பிக்கப்பட்டது.

*சுப்பையா.குமார், நிருபர், தென்காசி*



## ஆடி மாதமும் அம்மன் திருவருளும் வில்லிவாக்கம் தேவி ஸ்ரீ பாலியம்மன் சென்னை வில்லிவாக்கத்தில் பழமை வாய்ந்த சக்தி தலமாக இருப்பது ஸ்ரீ பாவாயம்மன் திருக்கோயில்,

பாலியம்மன் இங்கு கைகளில் கத்தி, சூலம், கபாலம், உடுக்கை ஆகியவற்றை ஏந்தி பக்தர்களுக்கு காட்சி தருகிறார்.

பாலியம்மனுக்கு பாலாபிஷேகம் செய்தால் குடும்பத்தில் நிம்மதி நிலவும் என்ற நம்பிக்கை உள்ளது. நோயால் பாதிக்கப்பட்டவர்கள், புத்தி சுவாதீனம் இல்லாதவர்கள், செய்வினை கோளாறால் பாதிக்கப்பட்டவர்கள் பாலியம்மனை மனமுருகி வேண்டி அபிஷேகம் செய்தால், அங்கு பிரதட்சணம் செய்தால் பிரச்சினைகள் நிவர்த்தியாகும் என்பது நம்பிக்கை. எந்த வகையான நீங்க வேண்டிய குணாதிசயங்கள் இருந்தாலும், இந்த மண்ணை மிதித்தால், அவர்களின் குணங்கள் மாறி அன்னையின் அருள் அவர்களுக்கு பரிபூரணமாக கிடைக்கும். பக்தர்களுக்கு என்ன குறை இருந்தாலும், அன்னையின் பாவாடை துணியால் மந்திரித்து, வேப்பிலை அடித்து, விபூதி, குங்குமம் பூசினால் அவர்களின் குறை உடனடியாக நிவர்த்தியடையும். ஆடி மாதம் முழுவதும் பாலியம்மனுக்கு விழாதான். ஆடி ஞாயிற்றுக்கிழமைகளில் கூழ் வார்த்து, சீர்கஞ்சி ஊற்றி விழா நடைபெறும். ஆடி கடைசி வாரத்தில் இங்கு தீமிதி திருவிழா பிரம்மாண்டமாக நடைபெறும். திருமணமாகாதவர்கள் இக்கோயிலில் உள்ள சுமார் 300 ஆண்டு பழமையான அரச மரத்தில், மஞ்சள் கயிற்றைக் கட்டி பூஜை செய்தால், 48 நாட்களில் திருமணம் கைகூடும் என்பதும் நம்பிக்கை. மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கவும் இங்கு பாலாபிஷேகம் செய்யப்படுகிறது. மேலும் இங்கு நாகதோஷ நிவர்த்தி சர்ப்ப சாந்தி பெற்று சுகமடையலாம்.

*ப.சங்கர், நிருபர், திருவொற்றியூர்*

# மருத்துவம்

**இருமல், தொண்டைகரகரப்பு**

பாலில் பூண்டைப் போட்டு காய்ச்சிக் குடித்தால் இருமல், ஜலதோஷம், தொண்டைக் கரகரப்பு போகும்.

**சளி**

பூண்டை தோல் உரித்து நசுக்கி, தக்காளி, உப்பு, தண்ணீர் சேர்த்து கொதிக்க வைத்து சூப் செய்து குடித்தால் சளி சீக்கிரம் குணமாகும்.

**டான்சில்**

வெள்ளைப்பூண்டு, இஞ்சி சாறு இரண்டையும் சேர்த்து அரைத்து இதனுடன் தேன் கலந்து காலை மாலை உணவுக்கு முன் சாப்பிட்டால் டான்சில் கரையும்.



# முட்டையில் இவ்வளவு கலோரிகளா?

கோழியின் ஒரு முட்டையில் மட்டும் சுமார் 150 கலோரிகள் இருக்கின்றன. இதில், வெள்ளைக்கருவில் 50 கலோரிகளும் மஞ்சள் கருவில் 100 கலோரிகளும் உள்ளன. எனவே, முட்டை மனிதர்களுக்கு மிகவும் போஷாக்கு மிகுந்த உணவாக இருக்கிறது. வாத்து முட்டையில் சுமார் 185 கலோரிகள் இருக்கின்றன. மனிதன் உயிர்வாழ சராசரியாக ஆணுக்கு நாளொன்றுக்கு 2000 கலோரிகளும் பெண்ணுக்கு 1600 கலோரிகளும் தேவைப்படுகின்றன.

இணை ஆசிரியர் : திருமதி. **பிரேமாவதி அசோக்குமார்**

## பெண்கள் விழிப்புணர்வு



பெண்கள் நாட்டின் கண்கள் என்றுதான் சொல்கிறார்கள். நாட்டில் பெண்களின் கொடுமை நடந்து கொண்டுதான் இருக்கிறது. சில பெண்கள் வெளியில் சொல்கிறார்கள். சிலர் சொல்லாமல் கொடுமையில் மறைந்து வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். காலத்தின் கட்டாயம் என்று கருதி வாழ்கின்ற பெண்கள் நடைபிணமாக வாழ்ந்து வருகின்ற பெண்களுக்கு விழிப்புணர்வு கொடுத்து சட்டத்தின் பகுதியை உணர்த்தி தலைநிமிர்ந்து வாழ தயங்காமல் இருப்போம். இதற்காக சட்ட ஆலோசகராக நான் இந்தப் பணியை இலவசமாக அளிக்கின்றேன்.

ஜெயந்தி, வழக்கறிஞர், உயர்நீதி மன்றம்

# பெண்

ஒரு பெண்ணானவள் உண்மையும் அன்பும் அழகும் அரவணைப்பும்
தாய்தன்மையும் பொறுமையும் கொண்டவள்.
மீண்டும் நாம் அமர நினைத்தாலும்
அமர முடியாத சிம்மாசனம் தாயின் மடி.
இங்கே சில பெண்களின் வாழ்க்கை கள்ளக்காதலில் முடிகிறது.
சில பெண்களின் காதல் விஷப்பாட்டிலில் முடிகிறது.
சில பெண்களின் காதல் தூக்குக்கயிற்றில் முடிகிறது.
சில பெண்களின் காதல் கருவறையே கல்லறையாகிறது.
சில பெண்களின் காதல் பிஞ்சிலேயே காதல் செய்து
ஆணவக் கொலையில் முடிகிறது.
சில பெண்களின் காதல் தீக்குச்சிக்கு இறையாகிறது.
சில பெண் குழந்தைகளின் உயிர் கள்ளிப்பாலில் முடிகிறது.
இந்தக் காலப் பெண்களோ கடல் கடந்து,
மலை கடந்து, இமயம் சிகரத்தைத் தொட்டு
சாதனை படைத்தார்கள்.



ராதா, தூத்துக்குடி

# பரிசுத்தொகை ஒரு கோடி

**சிறுகதை - கரீபியன் மொழி**

எழுத்தாளர் : **நான்சி மேரி ஹீ சுங்**
NANCY MARY HEE CHUNG (UNITED ARAB EMIRATES)
மொழி பெயர்த்தவர் : **Dr. B. மோகனப்பிரியா பிரகாஷ் குமார்**

**அத்தியாயம் 1 : கிழிந்த புத்தகத்தின் ரகசியம்**

சென்னை மாநகரின் புழுக்கமான வெயிலில், அனிதா அந்த பழைய புத்தகக் கடையின் வாசலில் நின்றாள். கல்லூரிப் படிப்பை முடித்து, வேலை தேடிக் கொண்டிருந்த அவளுக்கு, இன்று கையில் கிடைத்தது ஒரு பழைய, கிழிந்த புத்தகம் மட்டுமே. உள்ளே நுழைந்தவள், அந்த புத்தகத்தின் மஞ்சள் படிந்த பக்கங்களை புரட்ட ஆரம்பித்தாள். அப்போது, ஒரு பக்கத்தின் ஓரத்தில், மங்கலான மையால் எழுதப்பட்ட ஒரு வரி அவள் கண்ணில் பட்டது.

'பரிசுத்தொகை 1 கோடி! மறைக்கப்பட்ட புதையலைக் கண்டுபிடிப்பவரே வெற்றியாளர். துப்பு: இந்தப் புத்தகத்தின் பக்கங்களுக்கு இடையில்'

அனிதாவின் இதயம் படபடக்கத் தொடங்கியது. ஒரு கோடி ரூபாய்! அது அவளுடைய வாழ்க்கையையே மாற்றிவிடும். அவளது கண்கள் புத்தகத்தின் பக்கங்களில் வேகமாக ஓட ஆரம்பித்தன.

பல மணி நேர தேடுதலுக்குப் பிறகு, ஒரு பக்கத்தில் மங்கலான மையால் எழுதப்பட்ட ஒரு வரைபடம் கிடைத்தது. அந்த வரைபடத்தில், ஒரு பழைய கட்டிடத்தின் படம் இருந்தது. அந்தக் கட்டிடத்தின் அருகே, ஒரு மர்மமான சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. அனிதாவின் மனதில் பல கேள்விகள் எழுந்தன. அந்த கட்டிடம் எங்கே இருக்கிறது? அந்த சின்னம் எதைக் குறிக்கிறது? அந்த புதையல் என்னவாக இருக்கும்?

அனிதா, தன் தோழி மீனாவை அழைத்துக்கொண்டு, அந்தக் கட்டிடத்தைத் தேடிப் புறப்பட்டாள். வரைபடத்தில் காட்டப்பட்ட அடையாளங்களை வைத்து, அவர்கள் சென்னையின் பழைய பகுதிக்கு வந்தடைந்தனர். அங்குள்ள மக்களிடம் விசாரித்தபோது, அந்தக் கட்டிடம் ஒரு பழைய அனாதை இல்லம் என்றும், பல ஆண்டுகளாக அது பூட்டிக் கிடப்பதாகவும் தெரிந்துகொண்டனர்.

**அத்தியாயம் 2 : பழைய அனாதை இல்லத்தின் நினைவுகள்**

அனிதாவும், மீனாவும் அந்த அனாதை இல்லத்தை அடைந்தனர். அந்தக் கட்டிடம், இடிந்து பாழடைந்த நிலையில் இருந்தது. உள்ளே செல்லும் வழி, முட்புதர்களால் மூடப்பட்டிருந்தது. ஆனால், அவர்கள் தங்கள் முயற்சியைக் கைவிடவில்லை. அவர்கள் முட்புதர்களை வெட்டி, கட்டிடத்தினுள் நுழைந்தனர். உள்ளே, பழமையான சுவர்களில் விரிசல்களும், தரை முழுவதும் தூசியும் சூழ்ந்திருந்தது. ஆனால், கட்டிடத்தின் கம்பீரமான தோற்றமும், கட்டிடக்கலையும் இன்னும் அழியாமல் இருந்தன.

அவர்கள் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பகுதிக்குச் சென்றனர். அங்கு, ஒரு பெரிய இரும்புப் பெட்டி இருந்தது. பெட்டியின் மேல், வரைபடத்தில் இருந்த அதே மர்மமான சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. அனிதா பெட்டியைத் திறக்க முயன்றாள். ஆனால், அது பூட்டப்பட்டிருந்தது.

மீனா தன் பையில் இருந்த சாவியை எடுத்துப் பார்த்தாள். ஆச்சரியமாக, அந்த சாவி அந்த பெட்டியின் பூட்டுக்கு சரியாகப் பொருந்தியது. அனிதா பெட்டியைத் திறந்தாள். அதனுள், ஒரு பழைய, மஞ்சள் படிந்த கடிதம் இருந்தது.

அந்தக் கடிதத்தில், அந்த அனாதை இல்லத்தின் நிறுவனர், ஒரு பெண்மணி பற்றியும், அவர் தன் வாழ்நாள் முழுவதும் சேர்த்து வைத்த சொத்துக்கள் பற்றியும் எழுதப்பட்டிருந்தது. அந்த சொத்துக்களை அவர் ஒரு ரகசிய இடத்தில் மறைத்து வைத்திருப்பதாகவும், அந்த ரகசிய இடத்தைக் கண்டுபிடிப்பதற்கான துப்பு அந்த கடிதத்திலேயே இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அனிதாவும் மீனாவும் அந்தக் கடிதத்தை உன்னிப்பாகப் படித்தனர். அந்த கடிதத்தில், அந்த ரகசிய இடத்தைக் கண்டுபிடிப்பதற்கான துப்பு ஒரு புதிராக இருந்தது. 'கடலின் ஆழத்தில் கண்ணீர் சிந்தும் தேவதை, அவள் காலடியில் தான் புதையல் ஒளிந்திருக்கும்' என்ற வரிகள் அனிதாவின் மனதில் ஒரு படத்தை வரைந்தது.

**அத்தியாயம் 3: புதையல் வேட்டை**

அந்த புதிரை விடுவிப்பதற்காக, அனிதாவும் மீனாவும் அந்த அனாதை இல்லத்தை மீண்டும் ஒருமுறை ஆராய்ந்தனர். அவர்கள் சுவர்களில் இருந்த ஓவியங்கள், கல்வெட்டுகள், மற்றும் பிற அடையாளங்களை உன்னிப்பாகப் பரிசோதித்தனர். அப்போது, அவர்களுக்கு ஒரு விசித்திரமான விஷயம் தெரிந்தது.

அந்த அனாதை இல்லத்தின் தோட்டத்தில், ஒரு பழைய கிணறு இருந்தது. அந்த கிணற்றின் அருகே, ஒரு சிறிய கல் சிலை இருந்தது. அந்த சிலையில், ஒரு பெண்ணின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அந்தப் பெண்ணின் கண்களில் இருந்து கண்ணீர் வடிவது போன்ற சிற்ப வேலைப்பாடு இருந்தது.

அனிதாவுக்கு அந்த சிலையைப் பார்த்ததும், ஒரு யோசனை தோன்றியது. அவள் கிணற்றில் இறங்கி, அந்த திறவுகோலைத் தேடினாள். சிறிது நேர தேடுதலுக்குப் பிறகு, அவள் அந்த திறவுகோலைக் கண்டுபிடித்தாள். அது அந்த சிலையின் கையில் இருந்தது போல் வடிவமைக்கப்பட்டிருந்தது.அனிதாவும், மீனாவும் அந்த திறவுகோலை எடுத்துக்கொண்டு, அனாதை இல்லத்தின் ஒரு பழைய அறைக்குச் சென்றனர். அந்த அறையில், ஒரு

**அத்தியாயம் 1: கிழிந்த புத்தகத்தின் ரகசியம்**

சென்னை மாநகரின் புழுக்கமான வெயிலில், அனிதா அந்த பழைய புத்தகக் கடையின் வாசலில் நின்றாள். கல்லூரிப் படிப்பை முடித்து, வேலை தேடிக் கொண்டிருந்த அவளுக்கு, இன்று கையில் கிடைத்தது ஒரு பழைய, கிழிந்த புத்தகம் மட்டுமே. உள்ளே நுழைந்தவள், அந்த புத்தகத்தின் மஞ்சள் படிந்த பக்கங்களை புரட்ட ஆரம்பித்தாள். அப்போது, ஒரு பக்கத்தின் ஓரத்தில், மங்கலான மையால் எழுதப்பட்ட ஒரு வரி அவள் கண்ணில் பட்டது.

'பரிசுத்தொகை 1 கோடி! மறைக்கப்பட்ட புதையலைக் கண்டுபிடிப்பவரே வெற்றியாளர். துப்பு: இந்தப் புத்தகத்தின் பக்கங்களுக்கு இடையில்'

அனிதாவின் இதயம் படபடக்கத் தொடங்கியது. ஒரு கோடி ரூபாய்! அது அவளுடைய வாழ்க்கையையே மாற்றிவிடும். அவளது கண்கள் புத்தகத்தின் பக்கங்களில் வேகமாக ஓட ஆரம்பித்தன.

பல மணி நேர தேடுதலுக்குப் பிறகு, ஒரு பக்கத்தில் மங்கலான மையால் எழுதப்பட்ட ஒரு வரைபடம் கிடைத்தது. அந்த வரைபடத்தில், ஒரு பழைய கட்டிடத்தின் படம் இருந்தது. அந்தக் கட்டிடத்தின் அருகே, ஒரு மர்மமான சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. அனிதாவின் மனதில் பல கேள்விகள் எழுந்தன. அந்த கட்டிடம் எங்கே இருக்கிறது? அந்த சின்னம் எதைக் குறிக்கிறது? அந்த புதையல் என்னவாக இருக்கும்?



அனிதா, தன் தோழி மீனாவை அழைத்துக்கொண்டு, அந்தக் கட்டிடத்தைத் தேடிப் புறப்பட்டாள். வரைபடத்தில் காட்டப்பட்ட அடையாளங்களை வைத்து, அவர்கள் சென்னையின் பழைய பகுதிக்கு வந்தடைந்தனர். அங்குள்ள மக்களிடம் விசாரித்தபோது, அந்தக் கட்டிடம் ஒரு பழைய அனாதை இல்லம் என்றும், பல ஆண்டுகளாக அது பூட்டிக் கிடப்பதாகவும் தெரிந்துகொண்டனர்.

**அத்தியாயம் 2 : பழைய அனாதை இல்லத்தின் நினைவுகள்**

அனிதாவும், மீனாவும் அந்த அனாதை இல்லத்தை அடைந்தனர். அந்தக் கட்டிடம், இடிந்து பாழடைந்த நிலையில் இருந்தது. உள்ளே செல்லும் வழி, முட்புதர்களால் மூடப்பட்டிருந்தது. ஆனால், அவர்கள் தங்கள் முயற்சியைக் கைவிடவில்லை. அவர்கள் முட்புதர்களை வெட்டி, கட்டிடத்தினுள் நுழைந்தனர். உள்ளே, பழமையான சுவர்களில் விரிசல்களும், தரை முழுவதும் தூசியும் சூழ்ந்திருந்தது. ஆனால், கட்டிடத்தின் கம்பீரமான தோற்றமும், கட்டிடக்கலையும் இன்னும் அழியாமல் இருந்தன.

அவர்கள் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பகுதிக்குச் சென்றனர். அங்கு, ஒரு பெரிய இரும்புப் பெட்டி இருந்தது. பெட்டியின் மேல், வரைபடத்தில் இருந்த அதே மர்மமான சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. அனிதா பெட்டியைத் திறக்க முயன்றாள். ஆனால், அது பூட்டப்பட்டிருந்தது.

மீனா தன் பையில் இருந்த சாவியை எடுத்துப் பார்த்தாள். ஆச்சரியமாக, அந்த சாவி அந்த பெட்டியின் பூட்டுக்கு சரியாகப் பொருந்தியது. அனிதா பெட்டியைத் திறந்தாள். அதனுள், ஒரு பழைய, மஞ்சள் படிந்த கடிதம் இருந்தது.

அந்தக் கடிதத்தில், அந்த அனாதை இல்லத்தின் நிறுவனர், ஒரு பெண்மணி பற்றியும், அவர் தன் வாழ்நாள் முழுவதும் சேர்த்து வைத்த சொத்துக்கள் பற்றியும் எழுதப்பட்டிருந்தது. அந்த சொத்துக்களை அவர் ஒரு ரகசிய இடத்தில் மறைத்து வைத்திருப்பதாகவும், அந்த ரகசிய இடத்தைக் கண்டுபிடிப்பதற்கான துப்பு அந்த கடிதத்திலேயே இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அனிதாவும் மீனாவும் அந்தக் கடிதத்தை உன்னிப்பாகப் படித்தனர். அந்த கடிதத்தில், அந்த ரகசிய இடத்தைக் கண்டுபிடிப்பதற்கான துப்பு ஒரு புதிராக இருந்தது. 'கடலின் ஆழத்தில் கண்ணீர் சிந்தும் தேவதை, அவள் காலடியில் தான் புதையல் ஒளிந்திருக்கும்' என்ற வரிகள் அனிதாவின் மனதில் ஒரு படத்தை வரைந்தது.

**அத்தியாயம் 3: புதையல் வேட்டை**

அந்த புதிரை விடுவிப்பதற்காக, அனிதாவும் மீனாவும் அந்த அனாதை இல்லத்தை மீண்டும் ஒருமுறை ஆராய்ந்தனர். அவர்கள் சுவர்களில் இருந்த ஓவியங்கள், கல்வெட்டுகள், மற்றும் பிற அடையாளங்களை உன்னிப்பாகப் பரிசோதித்தனர். அப்போது, அவர்களுக்கு ஒரு விசித்திரமான விஷயம் தெரிந்தது.

அந்த அனாதை இல்லத்தின் தோட்டத்தில், ஒரு பழைய கிணறு இருந்தது. அந்த கிணற்றின் அருகே, ஒரு சிறிய கல் சிலை இருந்தது. அந்த சிலையில், ஒரு பெண்ணின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அந்தப் பெண்ணின் கண்களில் இருந்து கண்ணீர் வடிவது போன்ற சிற்பவேலைப்பாடு இருந்தது.

அனிதாவுக்கு அந்த சிலையைப் பார்த்ததும், ஒரு யோசனை தோன்றியது. அவள் கிணற்றில் இறங்கி, அந்த திறவுகோலைத் தேடினாள். சிறிது நேர தேடுதலுக்குப் பிறகு, அவள் அந்த திறவுகோலைக் கண்டுபிடித்தாள். அது அந்த சிலையின் கையில் இருந்தது போல் வடிவமைக்கப்பட்டிருந்தது.அனிதாவும், மீனாவும் அந்த திறவுகோலை எடுத்துக்கொண்டு, அனாதை இல்லத்தின் ஒரு பழைய அறைக்குச் சென்றனர். அந்த அறையில், ஒரு பூட்டிய நிலையில் ஒரு பெரிய மரப்பெட்டி இருந்தது. அனிதா அந்த திறவுகோலைப் பயன்படுத்தி, பெட்டியைத் திறந்தாள்.

அந்த பெட்டியினுள், பல பழைய ஆவணங்கள் இருந்தன. அந்த ஆவணங்களைப் படித்த அனிதாவும், மீனாவும் அதிர்ச்சியடைந்தனர். அந்த ஆவணங்கள், அந்த அனாதை இல்லத்தின் நிறுவனர். அந்த

# அண்ணனுக்காக...





**JANSIRANI R**
நிருபர் – ராணிப்பேட்டை

ஆம்ஸ்ட்ராங் அண்ணன் இறப்பில் மரமும் இருப்பதால் மக்கள் தேசம் கட்சியினர் ஆவேசத்துடன் அவர்கள் பணியினை அகற்றிவிட்டு அண்ணனுக்காக பேட்டி கொடுக்க வந்துள்ளார் நம் ஆசை அண்ணன் ஆசை தம்பி அவர்கள் ஜெய் பீம்

---

# பெற்றோருக்கு உச்சநீதி மன்றம் அதிரடி தண்டனை



இரண்டாவது திருமணம் 6 மாத சிறை தண்டனை

சட்டவிரோதமாக இரண்டாவது திருமணம் செய்தவருக்கு 6 மாத சிறை தண்டனை

முதல் திருமணம் சட்டப்படி செல்லும் நிலையில், முதல் கணவர் தொடர்ந்த வழக்கில், சட்ட விரோதமாக இரண்டாவது திருமணம் செய்த மனைவி மற்றும் இரண்டாவது கணவருக்கு 6 மாத சிறை தண்டனை விதித்து உச்ச நீதிமன்றம் உத்தரவு!

இருவருக்கும் 6 வயதில் குழந்தை இருப்பதால், அதனை கருத்தில் கொண்டு இரண்டாவது கணவரின் தண்டனை முடித்த பிறகு மனைவிக்கு தண்டனை தொடங்கும் என உத்தரவு பிறப்பித்துள்ளார்.

**தியாகராஜன் ஜி**
சட்ட ஆலோசகர்

# யார் இந்த வீரமங்கை? விலை மதிப்பற்ற வைரங்கள் – 1

# வீரமங்கை குயிலி : மறைக்கப்பட்ட வரலாறு

எழுத்தாளர் : துணையாசிரியர் Mr. B.பிரகாஷ் குமார்

**அத்தியாயம் 1: விடியலின் முதல் கீற்று**

கி.பி. 1700களின் பிற்பகுதியில், தமிழகத்தின் சிவகங்கை சீமையின் ஒரு சிறிய கிராமமான குடஞ்சாவடி. பறவைகளின் இனிய கீச்சொலியும், விடியல் பனி மூட்டமும் கலந்து, ஒரு புத்துணர்வைத் தந்த அந்த அதிகாலையில், ஒரு சிறுமி, தனது வீட்டின் முற்றத்தில், கையில் சிறு வில்லுடன் நின்று கொண்டிருந்தாள். மெல்லிய உடல்வாகு கொண்ட அந்தப் பெண், தனது தந்தை பெரியமுத்துவின் கம்பீரமான உருவத்தை பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.



பெரியமுத்து, சிவகங்கை மன்னரின் படையில் பணிபுரியும் ஓர் சாதாரண வீரர். அவர் தனது ஒரே மகளான குயிலிக்கு, வில்வித்தை, வாள் சண்டை, குதிரையேற்றம் என எல்லா போர்க்கலைகளையும் கற்றுக் கொடுத்து வந்தார். ராணி வேலுநாச்சியார் மீது கொண்ட பற்றுதலால், தன் மகளையும் ஒரு வீரமங்கையாக உருவாக்க வேண்டும் என்ற கனவுடன் அவர் இருந்தார்.

குயிலியின் தாய் இராக்கு, ஓர் அஞ்சாத பெண்மணி. அவரின் வீரதீரச் செயல்கள் குயிலியின் மனதில் ஆழப் பதிந்திருந்தன. ஒரு முறை, காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்த போது, இராக்கு அஞ்சாமல் அந்த யானைகளை எதிர்த்து நின்றார். இறுதியில், அவரது உயிரை மாய்த்துக் கொண்டாலும், அவள் வீரம் குயிலியின் இதயத்தில் என்றென்றும் நிலைத்திருந்தது.

குயிலி, தன் தந்தையின் வழிகாட்டுதலில், சிறு வயதிலிருந்தே வில்வித்தை, வாள் சண்டை, சிலம்பம் போன்ற பல தற்காப்புக் கலைகளில் தேர்ச்சி பெற்றாள். அத்துடன், அவள் ஒரு சிறந்த அறிவாளியாகவும், நிர்வாகத் திறன் கொண்டவளாகவும் திகழ்ந்தாள். அப்போது, சிவகங்கை சீமையை ஆண்டு வந்த அரசி வேலு நாச்சியாருக்கு பெரியமுத்து தனது சேவையை அர்ப்பணித்திருந்தார். தந்தையின் வழியாக குயிலிக்கும் வேலுநாச்சியாருக்கும் இடையே ஒரு நல்லுறவு ஏற்பட்டது. குயிலியின் வீரம், அறிவு, மற்றும் சமூக அக்கறை ஆகியவை வேலு நாச்சியாரை மிகவும் கவர்ந்தன. அவர் குயிலியை தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று, அவளுக்கு அரசியல், பொருளாதாரம், மற்றும் நிர்வாகம் போன்ற பல விஷயங்களை கற்றுக் கொடுத்தார்.

**அத்தியாயம் 2: அரசியின் மெய்க்காப்பாளர்**

அரண்மனையில் குயிலி, வேலு நாச்சியாரின் நம்பிக்கைக்குரிய தோழியாக மாறினாள். வேலுநாச்சியாரின் அரசியல் மற்றும் போர் சார்ந்த விஷயங்களில் அவளுக்கு ஆலோசனை வழங்கினாள். தன் வீரத்தாலும், அறிவுத்திறனாலும் பல முறை வேலு நாச்சியாரைக் காப்பாற்றினாள். ஒரு சமயம், வேலு நாச்சியார் நஞ்சு கலந்த உணவை உண்ண இருந்தபோது, குயிலி அதை உணர்ந்து, தனது உயிரைப் பணயம் வைத்து ராணியைக் காப்பாற்றினாள். இந்த சம்பவத்தால் குயிலி மீது வேலு நாச்சியாருக்கு இன்னும் அதிக மதிப்பும், நம்பிக்கையும் ஏற்பட்டது.

**அத்தியாயம் 3: ஆங்கிலேயரின் சூழ்ச்சியும் துயரமும்**

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி சிவகங்கை மீது படையெடுத்தது. காலையார் கோயிலில் நடைபெற்ற போரில், சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர் மற்றும் அவரது மனைவி வேலுநாச்சியார் ஆகியோர் ஆங்கிலேயர்களால் சூழப்பட்டனர். தப்பிக்க வழியின்றி, முத்துவடுகநாதர் ஆங்கிலேயர்களால்

### அத்தியாயம் 1: விடியலின் முதல் கீற்று

கி.பி. 1700களின் பிற்பகுதியில், தமிழகத்தின் சிவகங்கை சீமையின் ஒரு சிறிய கிராமமான குடஞ்சாவடி. பறவைகளின் இனிய கீச்சொலியும், விடியல் பனி மூட்டமும் கலந்து, ஒரு புத்துணர்வைத் தந்த அந்த அதிகாலையில், ஒரு சிறுமி, தனது வீட்டின் முற்றத்தில், கையில் சிறு வில்லுடன் நின்று கொண்டிருந்தாள். மெல்லிய உடல்வாகு கொண்ட அந்தப் பெண், தனது தந்தை பெரியமுத்துவின் கம்பீரமான உருவத்தை பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பெரியமுத்து, சிவகங்கை மன்னரின் படையில் பணிபுரியும் ஓர் சாதாரண வீரர். அவர் தனது ஒரே மகளான குயிலிக்கு, வில்வித்தை, வாள் சண்டை, குதிரையேற்றம் என எல்லா போர்க்கலைகளையும் கற்றுக் கொடுத்து வந்தார். ராணி வேலுநாச்சியார் மீது கொண்ட பற்றுதலால், தன் மகளையும் ஒரு வீரமங்கையாக உருவாக்க வேண்டும் என்ற கனவுடன் அவர் இருந்தார்.

குயிலியின் தாய் இராக்கு, ஓர் அஞ்சாத பெண்மணி. அவரின் வீரதீரச் செயல்கள் குயிலியின் மனதில் ஆழப் பதிந்திருந்தன. ஒரு முறை, காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்த போது, இராக்கு அஞ்சாமல் அந்த யானைகளை எதிர்த்து நின்றார். இறுதியில், அவரது உயிரை மாய்த்துக் கொண்டாலும், அவள் வீரம் குயிலியின் இதயத்தில் என்றென்றும் நிலைத்திருந்தது.

குயிலி, தன் தந்தையின் வழிகாட்டுதலில், சிறு வயதிலிருந்தே வில்வித்தை, வாள் சண்டை, சிலம்பம் போன்ற பல தற்காப்புக் கலைகளில் தேர்ச்சி பெற்றாள். அத்துடன், அவள் ஒரு சிறந்த அறிவாளியாகவும், நிர்வாகத் திறன் கொண்டவளாகவும் திகழ்ந்தாள். அப்போது, சிவகங்கை சீமையை ஆண்டு வந்த அரசி வேலு நாச்சியாருக்கு பெரியமுத்து தனது சேவையை அர்ப்பணித்திருந்தார். தந்தையின் வழியாக குயிலிக்கும் வேலுநாச்சியாருக்கும் இடையே ஒரு நல்லுறவு ஏற்பட்டது. குயிலியின் வீரம், அறிவு, மற்றும் சமூக அக்கறை ஆகியவை வேலு நாச்சியாரை மிகவும் கவர்ந்தன. அவர் குயிலியை தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று, அவளுக்கு அரசியல், பொருளாதாரம், மற்றும் நிர்வாகம் போன்ற பல விஷயங்களை கற்றுக் கொடுத்தார்.

### அத்தியாயம் 2: அரசியின் மெய்க்காப்பாளர்

அரண்மனையில் குயிலி, வேலு நாச்சியாரின்

# 5 வயதில் கலக்கும் கராத்தே குழந்தை







தனிஷ்கா சந்தோஷ் 8 ஜூலை 2015 அன்று சென்னையில் P.K.சந்தோஷ் குமார் மற்றும் லோகேஸ்வரி சந்தோஷ் குமார் ஆகியோருக்கு பிறந்தார். இருப்பினும், தனிஷ்கா தனது 4 வயதிலேயே கராத்தே மீதான ஆர்வத்தைக் கண்டறிந்தார், தற்போது சென்னை ஆதனூரில் உள்ள ஹோலி சாய் இன்டர்நேஷனல் பள்ளியில் நான்காம் வகுப்பில் படித்து வருகிறார். அவர் திரு.பாஸ்கரின் வழிகாட்டுதலின் கீழ் பாக்கரின் யுகன் நா இஷின்-ரியு கராத்தே டோ- இந்தியா, மணிவாக்கம், சென்னை ஆகியவற்றில் சேர்ந்தார். அவர் பல போட்டிகளில் பங்கேற்று பல பதக்கங்களை வென்றுள்ளார். தனிஷ்கா கடந்த 5 ஆண்டுகளாக தனது தொடர்ச்சியான அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் இப்போது பிளாக் பெல்ட் – ஷோ டான் கிரேடு வழங்கப்பட்டது. முழு அர்ப்பணிப்புடனும், தனது எஜமானரின் முறையான வழிகாட்டுதலுடனும் இப்போது தனது அடுத்த கட்ட பயிற்சியில் அடியெடுத்து வைத்துள்ளார்.

**D.கிறிஸ்துராஜன்,** துணை ஆசிரியர்




திரைப்படக் கல்லூரியில் படித்து தங்கமடல் பெற்றவர். இயக்குனர் ஏ ஆர் காந்தி கிருஷ்ணா வசந்தபாலன் பத்ரி வெங்கடேஷ் போன்றவரிடம் இணை இயக்குனராக பணியாற்றியுள்ளார். சமீபத்தில் ட்ரீம் வாரியர்ஸ் தயாரிப்பில் வெளிவந்த அஞ்சாமை திரைப்படத்தில் இணை இயக்குனராக பணியாற்றியுள்ளார்.. திரைப்படக் கல்லூரியில் இவர் இயக்கிய வெளிச்சம் குறும்படத்திற்கு சிறந்த குறும்படத்திற்கான தமிழ்நாடு திரைப்பட அரசு விருது கிடைத்தது.. பத்துக்கும் மேற்பட்ட குறும்படங்கள் இயக்கியுள்ளார். முழு நீள திரைப்படம் இயக்கும் முயற்சியில் தீவிரமாக இயங்கி வருகிறார்.. எஸ் ஆர் எம் யுனிவர்சிட்டி பாப் டா போன்ற கல்லூரிகளில் துணை பேராசிரியராக பணிபுரிந்துள்ளார்.. தற்போது கோவையில் உள்ள கிளஸ்டர்ஸ் மீடியா காலேஜில் துணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார்.. தற்போது அகிலம் நீ என்னும் குறும்படத்தை கிளஸ்டர்ஸ் மீடியா காலேஜ் தயாரிப்பில் இயக்கியுள்ளார்




V6 FILM PVT LTD
VELAYUTHAM S
PROUDLY PRESENTS
நாற்கரப்போர்
"THE COLD WAR BETWEEN BLACK AND WHITE"
WRITTEN AND DIRECTED BY SHREE VETTRI
PRODUCED BY VELAYUTHAM S
DN-69
DOP ARJUN RAVI - GNANASEKAR RS MUSIC DINESH ANTONY EDITOR RANJEET CK ART THIRUMAN S.RAGAVAN
LYRIC KUGAI MA. PUGAZHENTHI AUDIOGRAPHY R.KRISHNAMOORTHY SFX C.SETHU COLORIST RAGURAM MAKE UP SASI UK
STUNT ROCK PRABHU MANAGER ELAYARAJA SELVAM PRO A. JOHN STILLS SIVA PUBLICITY DESIGNER RAJINKRISHNAN
EXECUTIVE PRODUCER ARUN MOZHITHEVAN
SRIKALASA